[1974 ஏப்ரல் 9

பள்ளிகள் தொகுதித் திட்டம்

* 785 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்கூல் காம்ளெக்ஸ் (School Complex) திட்டம் அமுல் நடத்தப்படுகிறதா ?

(இ) ஆம் எனில் எந்தெந்த உயர்நிலைப்பள்ளிகளுடன் எந்தெந்த ஆரம்பப் பள்ளிகள் இணைக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தால் என்னென்ன பலன்கள் ஏற்பட்டு இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஓர் உயர்நிலைப் பள்ளியும் அதன் அருகே உள்ள 3-4 நடுநிலைப்பள்ளிகளும், 10 அன்றி 20 துவக்கப் பள்ளிகளும் ஒரே குழுவாக இணைந்து செயல்படுகிறது. இக்குழுக்களின் தலைவராக உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியாற்றுகிறார். பள்ளி இணைப்புத் திட்டக்குழு பணியாளர்களின் ஓராண்டு வேலை திட்டம் மற்றும் பணியாளர்களின் முன்னேற்றத்திற்குரிய திட்டங்களை வகுக்கிறது. அவர்கள் செய்யும் முக்கியப் பணி, கல்வி பயணங்களையும், கண்காட்சிகளையும் அமைத்தல், கலை நிகழ்ச்சி, விளையாட்டு விழா ஏற்படுத்துதல், பொது சோதனைகள் வைத்து திருத்த இணைப்பிலுள்ள பள்ளிகளிடையே கல்வி வளர்ச்சிக்குரிய போட்டிகள் நடத்துதல், அன்றாட வகுப்பரை சிக்கலை விவாதித்தல், சிக்கல் தீர்வதற்குரிய செயல்முறைகளை ஏற்படுத்துதல், கல்விப் படக்காட்சிகளையும் அறிவியல் பரிசோதனைகளையும் நடத்துதல், நிதி வசதியற்ற பள்ளிகளுக்கு வசதியுள்ள பள்ளிகள் சேர்ந்து இணைந்தால் அவர்கள் தங்களால் இயன்ற உதவியைச் செய்வதற்கு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்தத் திட்டமானது திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டுமல்லாது வேறு மாவட்டங்களிலும் இருக்கின்றதா ? அப்படியில்லையென்றால், இந்த நல்ல திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா ?

@ 146-154-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 ஏப்ரல் 9]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் கிட்டத்தட்ட 114 உயர்நிலைப் பள்ளிகளைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு மாவட்டங்களில் ஏற்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு கல்வி நிறுவனம் பள்ளி இடைப்பயிற்சி நடத்தி அந்தந்த உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஊக்கம் கொடுத்து வருகிறது. இதுவரையில் 114 உயர்நிலைப்பள்ளிகளை ஒட்டி இது செய்யப்பட்டு வருகிறது.

State Dental Council.

* 786 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have received representation from the Tamil Nadu Dental Council for grants and allotment of place for their offices, during 1970–71; and

(*b*) the action taken thereon.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) (1) ஆம்

(2) : இல்லை.

(இ) தமிழ்நாடு பல் மருத்துவ குழுவிற்கு மான்யம் வழங்குவதில் மேல் நடவடிக்கை எடுக்க அதன் வரவு சிலவு கணக்குகள் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இதற்கு மானியக்கோரிக்கை எவ்வளவாக இருக்கும்? எப்போது வழங்கப்படும். பல் வைத்தியர்களிடம் இருந்து ஏதாவது கம்யூனிகேஷன் கிடைத்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அவர்களுக்கு முதலில் வரவுசெலவு கணக்கு எந்த அளவுக்கு அனுமதிக்கப்பட்டு இருந்ததோ அதை விட அதிகமாக கௌரவப் பதிவாளருக்கு ஊதியம் வழங்கியது காரணமாக அரசாங்கம் மறுப்புத் தெரிவித்தும், தொடர்ந்து ஊதியம் வழங்கிவிட்டதால் இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. பல் மருத்துவர் சட்டத்தின் 53-வது பிரிவின் கீழ் பல் மருத்துவர் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகையையும் 68-69-ம் ஆண்டு முதல் செலுத்தவில்லை. அப்படிப்பட்ட நிலையில் அரசாங்கம் முன்தொகை வழங்குவதற்குக்கூட அவர்கள் அவர்களைச் சீர்செய்துகொள்ளவேண்டுமென்று கேட்டார்கள். இப்போது ரூ. 50 ஊதியம் கொடுத்து கௌரவப் பதிவாளர் நியமித்து இருப்பதாகத் தெரிகிறது. அதற்கு மேற்கொண்டு அவர்களுக்கு மானியம் வழங்குவதாக இருந்தால் அவர்களது வரவு-செலவுக்கணக்குப்படி எந்த ஆண்டிலிருந்து வழங்கப்படவேண்டுமென்று இயக்குனர் மூலமாகக் கேட்கப்பட்டுள்ளது.